யுசிஎஸ்ஐ பல்கலைக்கழக மாணவர்களுக்கு

# மூன்று தங்க விருது



கங்கார், மே 21-

அனைத்துலக பொறியியல் கண்டுபிடிப்பு, புத்தாக்க கண்காட்சியில் யுசிஎஸ்ஐ பொறியியல் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று தங்க விருதும், ஒரு வெள்ளி விருதும் வென்று சாதனைப்படைத்துள்ளனர்.

5ஆவது அனைத்துலக பொறியியல் கண்டுபிடிப்பு, புத்தாக்க கண்காட்சி அண்மையில் கங்காரில் வெகுச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

இக்கண்காட்சியில் மலேசியா, அனைத்துலக ரீதியில் இருந்து 87 பல்கலைக்கழகங்கள், கல்லூரியில் கலந்து கொண்டு தங்களின் படைப்புகளை பார்வைக்கு வைத்தனர்.

குறிப்பா கொரியா, தைவான், குரோஷியா, ஈராக், உக்ரேய்ன், இந்தோனேசியா, கம்போடியா, ருமேனியா ஆகிய நாடுகளில் இருந்தும் மாணவர்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் நாட்டில் புகழ் பெற்ற யுசிஎஸ்ஐ பொறியியல் பல்கலைக்கழகத்தின் மாணவர்களும் கலந்து கொண்டு தங்களின் திறனை வெளிப்படுத்தினர்.

கு. செல்வராஜா, சின் சுன் மான், தியோ காய் வென் ஆகியோர் அப்பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்து அனைத்துலக கண்டுபிடிப்பு, புத்தாக்க கண்காட்சியில் கலந்து கொண்டனர். இம்மாணவர்களின் அபார படைப்பிற்கு மூன்று தங்கப் பதக்க விருதும், ஒரு வெள்ளிப்பதக்க விருதும் வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விருது பெற்ற மாணவர்கள் தங்களின் மகிழ்ச்சியை பேராசிரியர் டாக்டர் சுஜித்ராவுடன் பகிர்ந்து கொள்வதை படத்தில் காணலாம்.